என்று தெரிந்தால், கேள்விப்பட்டதைச் சொல்வதைவிட, நடைபெற்ற சம்பவங்களில் உண்மை இருக்குமானால், அது பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் நிச்சயமாக அதன் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 666, 667 மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகின்றன.

Knowledge of Indian Constitution to School Students

*Q.No. 668— Thiru N. KITTAPPA: Will the Hon. the Minister for Education be pleased to state the steps taken to provide knowledge of the Indian Constitution to the Studens in Schools?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பள்ளிகளில் 5, 6, 8 வகுப்புகளில் வரலாற்றுப்பாட நூல்களில் ''இந்திய அரசியல் அமைப்பு'' பற்றி அனைத்து மாணவர்களுக்கும் போதுமான அளவு விரிவாக கற்றுத்தரப்படுகிறது. மேல் நிலைப்பள்ளிகளில் மாணவர்கள் பயிலக்கூடிய விருப்பப் பாடங்களுள் ஒன்றாகிய ''அரசியலும் தற்கால அரசியலமைப்புகளும்'' என்னும் பாடத்தின் கீழும் இந்திய அரசியல் அமைப்புப் பற்றி விரிவாகப் பயிலலாம்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்திய அரசியல் அமைப்புப்பற்றி மாணவர்களுக்குச் சொல்லித்தருவதற்கு முன்பு சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சொல்லித்தர நடவடிக்கை எடுக்கப்படுமா? அதைப் போன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற 'கான்ஸ்டிட்யூஷன் ஆஃப் இந்தியா' என்ற புத்தகத்தை தமிழில் அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு முக்கியமான பிரச்னையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, இந்த அரசியல் அமைப்பு பற்றிய கருத்துக்களை நாட்டிலுள்ள அனைவரும் அறிந்துகொள்ள வேண்டியது மிகவும் அத்தியாவசியம். மாணவர்களுக்கு அதுபற்றி விரிவான விளக்கங்கள் சொல்லிக் கொடுக்கப்படுவதில்லை என்பது உலகம் சொல்லக் கூடிய கருத்து. லைவாணர் ரஷ்யாவுக்குச் செல்லும்போது அவர்களுக்கு

ஏற்பட்ட அனுபவத்தை பலமுறைஎடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் எல்லா மாணவர்களும் அரசியல் அமைப்பை தெளிவாகத் தெரிந்துகொள்ள அரசு விரைவில் நடவடிக்கை எடுக்குமா ?

[முற்பகல் 9-20]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, மாணவர்களுக்கு நாம் பல்வேறு துறை பற்றிய அறிவும் தரவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே அந்த அடிப்படை யிலேதான் அரசியல் அமைப்பு பற்றி எந்த அளவுக்கு சொல்ல வேண்டுமோ அந்த அளவுக்கு ஏற்ப, படிக்கின்ற பாட களுக் கேற்ப 5, 6, 8 ஆகிய வகுப்புகளில் எல்லா மாணவர்களுக்கும் சொல்லித் தருகிறோம். இதனை விரிவாக மேல் நிலை வகுப்புக் களில் சிறப்புப் பாடமாக எடுத்துப் படிக்கின்றவர்களுக்கு நல்ல ஆழ்ந்த கருத்துக்களைச் சொல்லி, மற்ற அரசியல் அமைப்புக் களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற அளவுக்கு பாடங்களைச் சொல்லிக் கொடுக்கின்ற அளவுக்கு வகை செய்திருக்கிறோம்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, நம் நாட்டினுடையது சுதந்திர அரசியல் அமைப்பு. அந்த அரசியல் அமைப்பினுடைய அரசியல் சட்டங்களை மாணவர்களுக்கு ஆரம்ப காலத்திலே லிருந்தே புகட்ட ஆரம்பித்தால் அவர்களுடைய தேசபக்தியும், கட்டுப்பாடும், ஒழுங்கும் வளரும். அந்த முறையில் அந்த அரசியல் அமைப்பை குறிப்பாக மனித உரிமைகள் பற்றி நமது அரசியல் சாசனத்தில் இருக்கும்படியான அம்சங்கள் மிக முக்கிய மானவை. மனிதன் தன்னுடைய உரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்றால் என்னென்ன செய்யவேண்டும், என்னென்ன, உரிமை இருக்கிறது போன்ற நல்ல கருத்துக்கள் நிறைந்த அரசியல் சட்டத்தின் பகுதிகள் பற்றிய பாடங்கள் நடத்தப் படுவது அநேகமாக இல்லை என்றே சொல்லலாம். ஆகவே இவைகளைப் பற்றி தகுந்த முறையில் மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, பாடங்களைப் பற்றிய முழு விவரங்களும் இல்லை என்றாலும் அரசியல் சட்டத்தினுடைய மிக முக்கியமான அம்சங்களான ஜனநாயக முறையும், மதச்சார்பற்ற தன்மையும் நிச்சயமாக அந்த மாணவர்களுக்குச் செரல்லித்தரவேண்டிய கருத்துக்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, அரசியல் சட்டத்தின பிரிவுகளை எல்லாம் தமிழிலே கொண்டு வருவ தற்கு ஆவன செய்யப்படுமா என்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் கேட்ட கேள்விக்கு

1979 ஏப்ரல் 9]

மாண்புமிகு அமைச்சரவர்கள் அது நல்ல யோசனை என்று சொன்னார்கள். நான் ரொம்ப வருத்தத்தோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய அமைச்சரவர்கள் தமிழிலே அவைகளைக் கொண்டுவருவதற்கு ஏற்பாடுகளைச் செய்வோம் என்று நம்பிக்கை ஏற்படுத்துகின்ற அளவுக்குப் பதில் சொல்லாமல் இப்படிச் சொல்வது வருத்தத்தை எற்படுத்துகிறது. ஆகவே அவற்றை தமிழில் கொண்டுவருவதற்குரிய நடவடிக்கை எடுக்கப் படுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அந்தத் துறை பற்றிய அதிகாரம் என்னிடத்தில் இல்லை, என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணரவேண்டும். அது சட்டமன்ற சம்பந்தமான துறையைச் சார்ந்தவர்களிடத்தில் இருப்பதால் அவர்களிடத்தில் சொல்லிச் செய்ய வேண்டிய காரியம். ஆகவே தான் அதனை நல்ல யோசனை என்று சொன்னேன்.

திரு. [illegible] பாலன்: தலைவரவர்களே, மேல்நிலைப் பள்ளிகளில் அரசியல் அமைப்பு பாடங்கள் சொல்லித்தரப் படுகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் அந்தப் பாடத்தைச் சொல்லிக் கொடுப்பதற்கு ஆசிரியர்கள் அமர்த்தப்படுகின்றபோது வரலாற்றுப் பாடத்தைப் படித்தவர்கள் நியமிக்கப்படுகிறார்களா அல்லது பாலிடிக்ஸ் பாடம் படித்தவர்கள் நியமிக்கப்படுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்; தலைவரவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

விஞ்ஞானக் கல்வித் திட்டம்.

*வினா எண் 669—திரு. துரை முருகன் திரு. என் கிட்டப்பா மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) யூனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் கூடிய விஞ்ஞானக் கல்வித் திட்டம் ஒன்றை அரசு நடத்தி வருகிறதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) & (ஆ) அவை முன்* விவர அறிக்கை** ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

(** 494-497 பக்கங்களில் இணைப்பு 1 ஆக அச்சிடப்பட்டுள்ளன)